DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THENI
C.C.No.262/19

Deposition of Witness: PW 1

| | |
|---|---|
| Name கார்த்திக் | Father's Name |
| Village | Taluk |
| Caste | Calling |
| Religion | Age |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.03.2022

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் போடியில் குடியிருக்கிறேன். ஓட்டுனராக தொழில் செய்துவருகிறேன். கடந்த 7.4.2019 ம் தேதி என் தம்பி விவேகானந்தன் மனைவி பவித்ராவிற்கு வளைகாப்பு விழா போடியில் நடைபெற்றது நாங்கள் அதை முடித்துவிட்டு வேனில் சுமார் 18 பேர் மதியம் 1.50 மணிக்கு போடியிலிருந்து அல்லிநகரம் நோக்கி சென்றோம். நாங்கள் போடியிலிருந்து அல்லிநகரம் செல்லும் மெயின்ரோட்டில் தீர்த்தகொட்டி கோவில் அருகில் மேற்கிலிருந்து கிழகு நோக்கிசென்றோம். அப்போது கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி PPP என்ற தனியார் பேருந்து அதிகவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வந்தது வந்து எங்கள் வேனின் மீது மோதியது. அதில் என்னுடன் வந்த என் தாய்மாமான்கள் வெற்றியரசன், சிற்றரசன், பேச்சியம்மாள், சரஸ்வதி ஆகியோர்கள் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார்கள். ரீட்டா என்பவருக்கு காயமாகி க.விலக்கு மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்த போது இறந்துவிட்டார். நான் தான் அனைவரையும் தூக்கி பார்த்தேன். அந்த வேனில் சென்ற அனைவருக்கும் காயம் ஏற்பட்டது. எனக்கு தலை மற்றும் காலில் காயமானது. அதன்பிறகு க.விலக்கு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸில் சென்றோம். சம்பவம் தொடர்பாக நான் பிசிபட்டி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் கொடுத்த புகார் மனு அசாஆ 1. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். அவர்கள் இன்னறய தினம் குறுக்கு விசாரணை செய்ய இயலவில்லை என்று வழக்கை வேறு தேதிக்கு ஒத்தி வைக்குமாறு கேட்டுக்கொண்டார். ஆனால் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்க நியாயமான காரணம் முன் வைக்கப்படாததால் வேண்டுகோள் நிராகரிக்கப்படுகிறது. சாட்சி குறுக்கு விசாரணை செய்யபடவில்லை.